# ஈழநாதம்

மக்கள் நாளிதழ்

பக்கங்கள் – 8

நாதம் 15 | திருவள்ளுவர் ஆண்டு 2035 | மார்ச் –22 | 04–04–2004 | ஞாயிற்றுக்கிழமை | ஓசை –046



பொற்காலம் வண்ணக் கலையகம்
MILLENNIUM COLOUR LAB
Video, Audio & Studio
மேலும் வீடியோ ஒளிப்பதிவு சேவைகள்,
கணினி முறை வீடியோ மிக்சிங்,
பாடல் பதிவுகள்
படம் பிறேம்செய்தல்.
அனைத்திற்கும் பொற்காலம் வண்ணக்கலையகம்,
யாழ் சாலை, கிளிநொச்சி.
(சி-9440)
R.V
பந்தல் சேவை, தர்மபுரம்.


# வடக்கு, கிழக்கில் தமிழ்த்தேசியக் கூட்டமைப்பு

# 20இற்கும் மேற்பட்ட ஆசனங்களைக் கைப்பற்றியது

## வெற்றிகுறித்து மக்கள் மகிழ்ச்சி

**சிறீலங்காவின் 13வது நாடாளுமன்றத்துக்காக நேற்று முன்தினம் நிறைவுபெற்ற பொதுத்தேர்தலில் வடக்கு-கிழக்கில் இலங்கை தமிழரசுக் கட்சி சின்னத்தில் போட்டியிட்ட தமிழ்த் தேசியக் கூட்டமைப்பு அமோக வெற்றியீட்டியுள்ளது. இவ்வெற்றி குறித்து தமிழ் மக்கள் மிக்க மகிழ்ச்சி கொண்டுள்ளனர்.**

தேசியப் பட்டியல் நீங்கலாக வடக்கில் 13 ஆசனங்களையும் கிழக்கில் 7 ஆசனங்களையும் அது கைப்பற்றியுள்ளது.

வடக்கில் ஒன்பது ஆசனங்களுக்காக நடைபெற்ற யாழ். மாவட்ட தேர்தல் தொகுதியில் 8 ஆசனங்களை தமிழ் தேசியக் கூட்டமைப்பு கைப்பற்றியுள்ளது.

இங்கு தெரிவான செல்வராசா கஜேந்திரன் ஒரு இலட்சத்துக்கு மேற்பட்ட விருப்பு வாக்குகளைப் பெற்றுள்ளார்.

ஆறு ஆசனங்களுக்கான வன்னிமாவட்டத் தேர்தல் தொகுதியில் ஐந்து ஆசனங்களை தமிழ் தேசியக் கூட்டமைப்பு கைப்பற்

(8ஆம் பக்கம் பார்க்க)

## வன்னித் தேர்தல் மாவட்டத்தில் கூட்டமைப்பிற்கு 5 ஆசனங்கள்

(செட்டிகுள நிருபர்)

வன்னி தேர்தல் மாவட்டத்தில் தமிழ்த் தேசியக் கூட்டமைப்பு 5 ஆசனங்களைப் பெற்றுள்ளது என்று வன்னி தெரிவத்தாட்சி அதிகாரி கே.கணேஸ் தெரிவித்துள்ளார். தேர்தல் தொடர்பான முடிவுகள் வெளியிடப்படாத போதிலும் தேர்தல் ஆணையாளரின் அனுமதியைப் பெற்று வன்னி தெரிவத்தாட்சி அதிகாரி முடிவுகளை வெளியிடுவதாகத் தெரிவித்தார். இதன்படி வேட்பாளர்கள் பெற்ற விருப்புவாக்குகள் தொடர்பாக இன்று தன்னால் விபரங்கள் வெளியிடப்படும் என்றும் தெரிவித்தார்.

வன்னி தேர்தல் தொகுதியில் தமிழ்க்கூட்டமைப்பு 5 ஆசனங்களையும் ஐக்கிய தேசிய முன்னணி ஒருஆசனத்தையும் பெற்

(8ஆம் பக்கம் பார்க்க)

## கூட்டமைப்பை வெற்றிபெறச் செய்த மக்களுக்கு புலிகள் நன்றி தெரிவிப்பு

நடந்துமுடிந்த நாடாளுமன்றப் பொதுத்தேர்தலில் தமிழ்த் தேசியக் கூட்டமைப்பை வெற்றிபெற வைத்ததன்மூலம் ஒரு வரலாறு காணாத அரசியல் பங்களிப்பையும் விடுதலைப்போராட்டத்தின் புதிய பரிணாமத்தையும் தமிழ்மக்கள் ஏற்படுத்தியுள்ளதாக விடுதலைப்புலிகள் தெரிவித்துள்ளனர்.

அத்துடன் தமிழ்த்தேசிய கூட்டமைப்பிற்கு வாக்களித்ததன் மூலம் தமிழ் மக்கள் தமது அபிலாசைகளையும் வெளிப்படுத்தியிருப்பதாகவும் அவர்கள் நேற்று விடுத்துள்ள அறிக்கையில் தெரிவித்துள்ளனர்.

அதற்காக தமிழ் மக்களிற்கு தமது பாராட்டுக்களையும் நன்றியையும் விடுதலைப்புலிகளின் சார்பிலும் அதன் தலைமைத்துவத்தின் சார்பிலும் தெரிவிப்பதாகவும் அவ்வறிக்கையில் மேலும் தெரிவிக்கப்பட்டுள்ளது.

இதுபற்றி மேலும் அவ்வறிக்கையில் விபரிக்கையில், தேர்ந்தெடுக்கப்பட்டுள்ள தமிழ்த்தேசிய கூட்டமைப்பின் உறுப்பினர்களை மென்மேலும் தமிழ் மக்களது விடுதலைப் பாதையில் அர்ப்பணிப்புடன் மக்களுக்கு சேவையாற்றவும் தமிழ்த்தேசியப்பாதையை உயர்த்திப்பிடித்து விடுதலைப் பயணத்தில் முன்னேறவும் இவ் அரசியல் பங்களிப்பு ஊக்குவித்துள்ளது. இதுவே மக்களது எதிர்பார்ப்புமாகும். அத்துடன் இன்றைய வரலாற்றுக்கட்டத்தின் முக்கியத்துவத்தையும் இப்பங்களிப்பு பெறுகின்றது.

தமிழீழ விடுதலைப்புலிகளாகிய

(8ஆம் பக்கம் பார்க்க)

## விருப்புவாக்கு அடிப்படையில் தெரிவு செய்யப்படுவோர்

தேர்தல் முடிவுகள் அறிவிக்கப்படுவது இடைநிறுத்தப்பட்டுள்ள போதிலும் விருப்பு வாக்குகளின் அடிப்படையில் பாராளுமன்ற உறுப்பினர்களாகத் தெரிவு செய்யப்படும் தமிழரசுக்கட்சி பாராளுமன்ற உறுப்பினர்களின் விபரங்கள் தெரிவத்தாட்சி அலுவலர் அலுவலகங்கள் மூலம் தெரியவந்துள்ளன. யாழ். வன்னி மட்டக்களப்பு திருகோணமலை ஆகியமாவட்டங்களின் முடிவுகளேதெரியவந்துள்ளன. அவைவருமாறு

### வன்னி மாவட்டம்

| இலங்கை தமிழரசுக் கட்சி | மொத்தம் |
|---|---|
| செல்வம் அடைக்கலநாதன் | 35274 |
| சிவசக்தி ஆனந்தன் | 27862 |
| வினோ நோகராதலிங்கம் | 25696 |
| சதாசிவம் கனகரத்தினம் | 24822 |
| சிவநாதன் கிசோர் | 14524 |

(8ஆம் பக்கம் பார்க்க)

## எந்த அரசாங்கம் ஆட்சிக்கு வந்தாலும் புலிகளுடன் பேச்சு நடத்த வேண்டும்

### -இதுவே அமெரிக்காவின் நிலைப்பாடென அறிக்கை

(கொழும்பு)

இலங்கையில் எந்த அரசாங்கம் பதவிக்கு வந்தாலும் தமிழீழ விடுதலைப்புலிகளுடன் சமாதானப்பேச்சுவார்த்தையை ஆரம்பிக்க வேண்டும் என்பதே அமெரிக்காவின் நிலைப்பாடாகும் என கொழும்பிலுள்ள அமெரிக்க தூதரகம் நேற்று தெரிவித்துள்ளது.

தூதரகம் நேற்று வெளியிட்டுள்ள அறிக்கையில் மேலும் தெரிவிக்கையில் இலங்கையில் தேர்தல் ஒன்று சுயாதீனமாக இடம்பெற்றமை குறித்து அமெரிக்கா வரவேற்கிறது எனத் தெரிவிக்கப்பட்டுள்ளது. (3.2)

## ஈ.பி.டி.பி, பொலிசாருக்கெதிராக ஊர்காவற்றுறையில் மக்கள் ஆர்ப்பாட்டம்

ஊர்காவற்றுறை வாழ் மக்கள் திரண்டு ஈ.பி.டி.பி.யினருக்கும் பொலிசாருக்கும் எதிராக ஆர்ப்பாட்டப்போராட்டமொன்றில் நேற்று ஈடுபட்டுள்ளனர்.

நேற்று முற்பகல் ஊர்காவற்றுறை பகுதியில் உள்ள வீதி ஒன்றால் சென்று கொண்டிருந்த தீவகபிரதேசத்திற்குரிய அரசியல் துறைபோராளிகளை ஈ.பி.டி.பியினரும் பொலிசாருமாக இணைந்து ஆயுத முனையில் அச்சுறுத்தியுள்ளனர். ஈ.பி.டி.பி.யினர் மற்றும் பொலிசார் மீது ஆத்திரமடைந்த அப்பகுதி மக்கள் கண்டித்து ஊர்

(8ஆம் பக்கம் பார்க்க)

## முறைப்பாடு நிராகரிப்பு

(கொழும்பு)

யாழ்ப்பாண தேர்தல் மாவட்டத்தில் முறைகேடுகள் இடம்பெற்றதாகச் செய்யப்பட்ட முறைப்பாட்டினைதேர்தல் ஆணையாளர்

(8ஆம் பக்கம் பார்க்க)

## தேர்தல் முடிவுகள் அறிவிப்பு ஆணையாளரால் இடைநிறுத்தம்

(கொழும்பு)

பத்துமாவட்டங்களிற்கான தேர்தல் முடிவுகள் அறிவிக்கப்பட்ட நிலையில் ஏனைய மாவட்டங்களுக்கான முடிவுகள் அறிவிக்கும் பணி இடைநிறுத்தப்பட்டுள்ளதாக சிறீலங்காவின் தேர்தல் ஆணையாளர் தயானந்த திசநாயக்க அறிவித்துள்ளார்.

கண்டி, திகாமடுல்ல உள்ளிட்ட 33தொகுதிகளிலிருந்து கிடைக்கப்பெற்ற முறைப்பாட்டினையடுத்தே இவற்றிற்கான முடிவுகள் அறிவிக்கப்படுவது இடைநிறுத்தப்பட்டுள்ளது.

முறைப்பாடுகள் கிடைக்கப்பெற்ற தொகுதிகளிலிருந்து

(8ஆம் பக்கம் பார்க்க)

## கிளி. மருத்துவ சங்க கட்டட திறப்புவிழாவும் மருத்துவக் கருத்தரங்கும்

(கிளிநொச்சி)

கிளிநொச்சி மருத்துவ சங்க அலுவலகத் திறப்பு விழாவும், மருத்துவக் கருத்துரைகளும் இன்று மாலை 2.30 மணிக்கு கிளிநொச்சி மாவட்ட வைத்திய சாலையில் நடைபெறவுள்ளது. இதில் கருத்துரைகள் துறை சார்ந்த வைத்திய நிபுணர்களால் வழங்கப்படவுள்ளது.

பொதுவான காது, மூக்கு, தொண்டை நோய்களுக்கு டாக்டர் தம்பிராசாவும், பெண்களின் மாதவிடாய்க்கு பின்னான ஓமோன் சிகிச்சை தொடர்பாக டாக்டர் இரட்ணகுமாரி புஸ்பராஜா அவர்களும் கருத்துரை

(8ஆம் பக்கம் பார்க்க)

## கூட்டமைப்பின் வெற்றி போராட்டத்திற்கு அரசியல் அங்கீகாரத்தை வழங்கியுள்ளது

### அதிக விருப்புவாக்குகளைப் பெற்ற கஜேந்திரன்

(யாழ்ப்பாணம்)

தமிழ்த்தேசியக்கூட்டமைப்பின் வெற்றி தமிழீழ விடுதலைப் போராட்டத்திற்கு அரசியல் அங்கீகாரத்தை வழங்கியுள்ளதாக யாழ் மாவட்டத்தில் அதிகூடிய விருப்பு வாக்குகளைப் பெற்றுள்ள தமிழ்த் தேசியக் கூட்டமைப்பு வேட்பாளர் கஜேந்திரன் தெரிவித்துள்ளார்.

தனது வெற்றிகுறித்து அவர் ...

20 ஆண்டுகாலமாக எமது விடுதலை இயக்கம் நடத்தி வந்த விடுதலைப்போராட்டம் பயங்கரவாதப் போராட்டம் அல்ல அது தமிழ்மக்களின் உரிமைக்கான போராட்டம் என்பதையும் தமிழ் மக்களின் ஏகபிரதிநிதிகள் விடுதலைப்புலிகள் மட்டும்தான் என்பதையும் எமது தலைவர் பிரபாகரன் தான் என்பதையும் உலகத்துக்கு ...

சொல்லவிருக்கிறது என தெரிவித்த அவர்

ஐக்கிய மக்கள் சுதந்திர முன்னணியாக இருந்தால் என்ன, ஐக்கியதேசியக்கட்சியாக இருந்தால் என்ன விடுதலைப்புலிகளின் கோரிக்கைகளை ஏற்று பேச்சுக்களை நடத்த முன்வரும் பட்சத்தில் அந்தக் கட்சியுடன் பேச்சுக்களை நடத்துவதற்கு தயாராக இருக்...

## வரிவிளம்பரம்

### அமுதன் கல்விநிலையம்

புதுக்குடியிருப்பு

A/L 2006 இற்கான புதிய வகுப்புக்கள் ஆரம்பமாகின்றது. கலைப்பிரிவு:-03.04.2004பி.ப.3.00 மணி. க.பொ.த(சா/த)மீட்டல் 03.04.2004 பி.ப.3.00 மணி(வழமையான ஆசிரியர்குழுவினர்) (4065)

### புதிய வகுப்புக்கள் ஆரம்பம்

A/L 2004 கலைப்பிரிவு 07/04/2004 (புதன் கிழமை) காலை:- 9.00 மணிக்கு ஆரம்பமாகின்றது. வெண்ணிலா கல்வி நிலையம், மல்லாவி. (4120)

### வெளிவந்துவிட்டது

(பொது அறிவு) தேடலும் தெளிவும்-இதழ் 7 வெளிவர இருப்பவை *பொது அறிவு தேடலும் தெளிவும் -8 2004 -II * மாதிரி வினாத்தாளுடன் கூடிய கடந்தகால வினா விடைகளுடன் "ஆசிரியர் போட்டிப்பரீட்சைக்கான வழிகாட்டி" - 2004 காலம் - 25.04.2004 அறிவமுது புத்தகசாலைகளில் (4419)

### எட்வின் கல்வி நிலையம்

புதுக்குடியிருப்பு

A/L 2006 ற்கான புதிய வகுப்புக்கள் ஆரம்பமாகின்றன. காலம்:- 03.04.2004 சனிக்கிழமை நேரம்:- பி.ப4.00 *கலைப் பிரிவு புவியியல் திரு சங்கர், தமிழ் திரு குணபாலன், இந்துநாகரீகம் திரு மங்களேஸ், * வர்த்தகப்பிரிவு பொருளியல் திரு சசிகுமார், வணிகக்கல்வி திரு ஜெயராஜா, கணக்கியல் திரு சுதர்சன், O/L மீட்டல் O/L 10ஆம், 9ஆம் தரங்களிற்குமான அனைத்துப்பாடங்களும் ஆரம்பமாகின்றன. (4067)

### ஆதவன் கல்வி நிலையம்

A/L 2006 கலை,வர்த்தகம் ஆரம்பம். 03.04.2004 சனிக்கிழமை காலை 9.00 கலைப்பிரிவிக்குரிய சகல பாடங்களும் நடைபெறும். நிர்வாகி. (4414)

### Science Hall

புதுக்குடியிருப்பு

A/L 2006ற்கான புதிய வகுப்புக்கள் ஆரம்பமாகின்றது. வர்த்தகப் பிரிவு 03.04.2004 பி.ப3.00 மணி விஞ்ஞானப்பிரிவு- 03.04.2004 காலை8.00 மணிக்கு (வழமையான ஆசிரியர் குழுவினர்) (4066)

## தோல்வியையடுத்து ஆனந்தசங்கரி விமானமூலம் கொழும்பு பயணம்

(யாழ்ப்பாணம்)

தேர்தலில் படுதோல்வி அடைந்த ஆனந்தசங்கரி நேற்றுக்காலை விமானம் மூலம் கொழும்பிற்குப் பயணமாகியுள்ளார்.

யாழ்.மாவட்டத்தில் சுயேட்சைக்குழுவாக போட்டியிட்ட இவரால் யாழ்ப்பாண மாவட்டத்தில் அளிக்கப்பட்ட மொத்த வாக்கில் 1.8 சதவீதத்தை மட்டும் பெற்று ஒரு ஆசனத்தையேனும் பெற முடியவில்லை.

## துயர் பகிர்கின்றோம்

### திருமதி நாகம்மா வைரமுத்து

திருமதி நாகம்மா வைரமுத்து உருத்திரபுரம் வடக்கு கிராமஅலுவலர் திரு வைரமுத்து வைத்தீஸ்வரமூர்த்தியின் அன்புத்தாயாரும், சக்திபுரம் மாதர் கிராம அபிவிருத்திச்சங்கத் தலைவர் திருமதி. வைத்தீஸ்வரமூர்த்தி கௌசலாவின் அன்பு மாமியாருமான திருமதி நாகம்மா வைரமுத்து 2004-03-15 அன்று காலமானதையிட்டு துயருற்றிருக்கும் குடும்பத்தினரின் துயரில் நாமும் பங்கு கொள்வதோடு அன்னாரின் ஆத்மா சாந்தியடையப் பிரார்த்திக்கின்றோம்.

சக்திபுரம் கிராம அபிவிருத்திச் சங்கமும்
சக்திபுரம் மாதர் கிராம அபிவிருத்திச் சங்கமும்
உருத்திரபுரம் வடக்கு

(4358)

## சாய்ந்தமருது வாக்குச்சாவடியில் அடிதடி

சாய்ந்தமருது அல்ஹிலால் வித்தியாலய வாக்குச்சாவடியில் பேரியல் அஷ்ரப்பின் பாதுகாவலர்களுக்கும் சுயேச்சைக் குழு வேட்பாளருக்குமிடையே ஏற்பட்ட காரசாரமான வாக்குவாதம் அடி தடியில் முடிந்தது.

இந்த கைகலப்பைத் தடுக்க பொலிசார் துப்பாக்கிச் சூடு நடத்தினர். சிறலங்கா முஸ்லிம் காங்கிரஸ் தலைவர் ரவூப்ஹக்கீம், தேசிய முஸ்லிம் காங்கிரஸ் தலைவர் ஏ.எல்.எம். அதாவுல் லாஹ் நு.ஆ.தலைவியான பேரியல் அஷ்ரப் ஆகியோருக்கிடையில் இப்பகுதியில் முஸ்லிம் பிரதேசங்களில் போட்டி நிலவுவது தெரிந்ததே.

## 31ம் நாள் நினைவு அஞ்சலியும் அந்தியேட்டி அழைப்பிதழும்

பிறப்பு 24 11 1943



உதிர்வு 06 03 2004

### திருமதி சிவயோகமலர் கதிரேசு

(அமுதசுரபி, வில்சன்வீதி, இரணமடு, கிளிநொச்சி)

குலமகளாய் குடும்ப விளக்காய்
கண்கண்ட தெய்வமென கதிரேசுதனை
கணவனாய் அடைந்து இல்லறந்தனில்
குவலயம் போற்றி ஏற்ற வாழ்ந்தே
நன்மக்கள் நால்வரைப் பெற்று
நானிலம் போற்ற வாழவைத்து
நல்லுலகம் சென்றுவிட்டார்
நம்மினிய தாயவள்

05-04-2004 அன்று அன்னாரின் இல்லத்தில் நடைபெறும் 31ம் நாள் நிகழ்விலும், மதிய போசனத்திலும் கலந்து அன்னாரின் ஆத்மா சாந்திக்காக பிரார்த்திக்குமாறு உற்றார், உறவினர்கள், நண்பர்கள் அனைவரையும் அன்புடன் கேட்டுக்கொள்கின்றோம்.

கணவன்(காந்தி), பிள்ளைகள்,
மருமக்கள்,
பேரப்பிள்ளை(அட்சயா)

(4418)



# ஈராக் விவகாரத்தில் இணைந்து செயற்படும் அமெரிக்காவின் அழைப்பிற்கு எதிர்ப்பு!

## -நேட்டோ கூட்டத்தில் சர்ச்சை

***ஈராக்கில் அமெரிக்க படையினருடன் இணைந்து செயற்படுமாறு விடுத்த அழைப்பினை நேட்டோ அமைப்பு நாடுகள் சில வெளிப்படையாக எதிர்த்துள்ளன. நேட்டோ அமைப்பின் கூட்டத்தில் இது குறித்து ஆட்சேபம் தெரிவிக்கப்பட்டுள்ளது.***

நேட்டோ அமைப்பில் புதிதாக கிழக்கு ஐரோப்பிய நாடுகள் சில இணைந்து கொள்ளப்பட்டதை யடுத்து வெளிவிவகாரஅமைச் சர்கள் மட்டத்திலான கூட்ட மொன்று நடைபெற்றது. தற் போது நேட்டோ அமைப்பில் அங் கம் வகிக்கும் 26 நாடுகளின் வெளியுறவு அமைச்சர்கள் இதில் பங்கேற்றனர்.

அமெரிக்கா இராஜாங்க அமைச சர் கொலின் பவல் இங்கு உரை யாற்றுகையில், ஈராக்விவகா ரத்தில் நேட்டோ பங்களிப்பின் அவசியம் குறித்து வலியுறுத் தினார்.

மத்திய கிழக்கில் ஸ்திரத்தன் மையை ஏற்படுத்தும் வகையில் நேட்டோ அமைப்புக்கு கூடுதலான பங்களிப்பை வழங்குவது குறித்து சிந்திக்கு மாறு கொலின் பவல் கேட்டுக் கொண்டார்.

ஆனால், ஈராக்கில் அமெ ரிக்கா தலைமையிலான ஆக்கிர மிப்பை ஆட்சேபித்து பிரான்ஸ், வேர்மன் வெளியுறவு அமைச் சர்கள் இந்த ஆலோசனைக்கு வெளிப்படையாக ஆட்சேபம் தெரிவித்துள்ளனர்.

ஈராக்கில் நியாயமான அரசாங்கம் அமைக்கப்படவேண் டும் என்றும் அவர்கள் இவ் வேளை வலியுறுத்தி கூறியுள் ளனர் அத்தோடு நியாயமான அரசாங்கம் அமைக்கப்பட்டதன் பின்னர் வேண்டுமானால் அமெ ரிக்காவின் இந்த அழைப்பைப் பற்றி சிந்திக்கலாம் என்றும் அவர் கள் திட்டவட்டமாக கூறியுள் ளனர்.

ஈராக் மீது அமெரிக்கா ஆக்கிர மிப்புப் போரை மேற்கொள்ள எடுத்த தீர்மானத்தைத் தொடர்ந்து இன்று வரை பிரான்ஸ், ஜேர்மன் நாடுகள் அதற்கு கடுமையான எதிர்ப்பை— வெளிப்படுத்தி வருகின்றமை தெரிந்ததே.

## ஷரோனின் அச்சுறுத்தலுக்கு அமெரிக்கா கண்டனம்!

இஸ்ரேலியப் பிரதமர் பலஸ்தீன சனாதிபதிக்கு கொலை மிரட்டல் விடுத்திருப்பதற்கு அமெரிக்கா கண்டனம் தெரிவித்துள்ளது.பலஸ் தீன சனாதிபதி யசீர் அரபாத் படு கொலை செய்யப்படு வதை தாம் ஆட்சேபிப்பதாக அமெரிக்கா கூறி யுள்ளது.

பலஸ்தீன பிரதமர் அகமட்கூரி ஷரோனின் கருத்துக்கள் பொறுப் பற்றவை, கண்டிக்கத்தக்கவை என்று கூறியுள்ளார்.




அமெரிக்க சனாதிபதி ஜோர்ச் டபிள்யூ புஷ் மேற்கு ஜோர்ஜினியா விலுள்ள மார்ஷல் பல்கலைக்கழகத்திற்கு விஜயம் ஒன்றை நேற்று முன்தினம் மேற்கொண்டிருந்த வேளை தொழில் வளர்ச்சி பற்றி உரையாற்றுகின்றார்.

## காஷ்மீர் பிரச்சினைக்கு விரைவில் தீர்வின்றேல் பேச்சிலிருந்து விலகல்

### *பாகிஸ்தான் சனாதிபதி முஷாரப்*

(இஸ்லாமாபாத்)

இந்தியாவும் பாகிஸ்தானும் காஷ்மீர் பிரச்சினைகளுக்கு விரைவில் தீர்வுகாணவேண்டும் அல்லது நான் சமாதான முனைப்புகளிலிருந்து விலக வேண்டிய நிலை ஏற்படுமென பாகிஸ்தான் சனாதிபதி முஷாரப் எச்சரித்துள்ளார்.

இரண்டு நாடுகளுக்குமிடை யேயான பேச்சு வார்த்தைக 'ளின் முன்னேற்றங்கள் ஜு"லை மாதமளவில் எதிர்பார்க்கப்படு கிறன. இந்நிலையில் காஷ்மீர் பிரச்சினைக்கு தீர்வுகிடைக்கு மென எதிர்பார்ப்பதாக அவர் மேலும் கூறியுள்ளார்.



நேபாள தலைநகர் காத்மண்டுவில் வியாழக்கிழமை இடம்பெற்ற ஆர்ப்பாட்டமொன்றில் பங்கேற்றோர்.

## யூதர்களைப் படுகொலை செய்தால் பதில் நடவடிக்கைக்கு தயாராவோம்

### -ஏரியல் ஷரோன் எச்சரிக்கை

(டெல்அவிவ்)

இஸ்ரேலியப் பிரதமர் ஏரியல் ஷரோன் பலஸ்தீன சனாதிபதி யசீர் அரபாத்திற்கு எச்சரிக்கை விடுத் துள்ளார்.

ஏரியல் ஷரோன் தனது எச்ச ரிக்கையில்; யூதர்களைப் படு கொலை செய்தவர்கள் யாராக இருந்தாலும் அவர்கள் மீது பதில் நடவடிக்கை எடுக்கப்படுமென தெரிவிக்கப்பட்டுள்ளது.

இஸ்ரேலினால்காஸா முனை யில் மேற்கொள்ளப்பட்ட உலங்கு வானூர்தி தாக்குதலில் ஹமாஸ் தலைவர் ஜாஷீன் படு கொலை செய்யப்பட்டு பத்து நாட் களின் பின்னர் ஏரியல்ஷரோன் இந்த அச்சுறுத்தலை விடுத் துள்ளார். பலஸ்தீனத்தின் ஹமாஸ் இயக்கம் இஸ்ரேல் மீது பதி லடித்தாக்குதலை நடத்தும் என எதிர்பார்க்கப்படும் நிலையில் அங்கு தொடர்ந்து பாதுகாப்பு ஏற்பாடுகள் பலப்படுத்தப்பட்டுள்ளன என் பதும் இங்கு குறிப்பிடத்தக்கது.

## பிளவு பட்டுள்ள சைப்பிரஸின் தலைவிதியை இரு பகுதி மக்களுமே தீர்மானிக்க வேண்டும்


### ஐ. நா. பொதுச் செயலர் வலியுறுத்து

பிளவுபட்டுள்ள சைப்பிரஸின் தலைவிதியை அதன் இரு நாட்டு மக்களுமே தீர்மாணிக்க வேண டும் என்று ஐ.நா.சபை கூறி யுள்ளது.

பிளவுபட்டுள்ள சைபிரஸ் தீவின் இரு மரங்கிலும் உள்ள மக்கள் அதனை ஐக்கியப் படுத்தும் ஐக் கிய நாடுகள் சபையின் திட் டத்தை ஏற்றுக் கொள்வதே என்பது பற்றி தாமேதீர்மாணிக்க வேண் டும் என்று ஐ.நா.செயலர் கொபி அனான் கூறியுள்ளார்.

ஐ.நா. சபையின் செயலாளர் கொபி அனானால உருவாக்கப பட்ட சைபிரஸ் பற்றிய திட்டம் நேற்று முன்தினம் சமர்ப்பிக்கப்பட் டுள்ளது.15 அங்கத்துவ நாடுக ளைக் கொண்ட ஐ.நா.சபை, கிரேக்க சைபிரஸு"ம் துருக்கிய சைபிரஸ்ம் குறித்த திட்டத்தை ஏற்றுக் கொள்ள வேண்டுமென்று வலியுறுத்தப்பட்டுள்ளது.

ஆனால் பாதுகாப்பு சபை கொபி அனானுக்கு நன்றி தெரிவித்து அறிக்கை விடுத்த தோடு நின்று விட்டது.இந்தத் திட்டம் எதிர்வரும் 24 ஆம் திகதி சைப் பிரானின் பிளவுபட்ட இரு பகு திகளிலும் கருத்துக் கணிப்பிற்கு விடப்பட்டுள்ளது.



அமெரிக்க சனநாயகக் கட்சி சனாதிபதி வேட்பாளர் செனட்டர் ஜோன்கெரி அவருடைய மனைவியுடன் காணப்படுகின்றார். பொஸ்ரனில் அவருடைய இல்லத்தில் இடம்பெற்ற கூட்டமொன்றில் பங்கேற்கின்றார்.

## புகைப்பிடிப்பதை நிறுத்தினால் 20நிமிடங்களில் பலன் தெரியும்

புகைப்பிடிப்பதை நிறுத்தினால் அதன்பலன் 20 நிமிடங்களில் தெரிந்துவிடும் என ஆய்வுகள் புதிதாக கண்டறிந்துள்ளன.

இந்தவகையில் புகைப்பிடிப்பதை நிறுத்திய 20 நிமிடங்களின் பின்னர், இரத்த அழுத்தம் சாதாரண நிலைக்குத் திரும்புகின்றது, கை,கால்களின் சூடு சாதாரண நிலைக்கு உயர்கின்றது இவைதான் முதல் பலன்கள்.

எட்டு மணி நேரத்தின் பின்னர், கார்பன் மனாக்ஸைடின் அளவு குறைந்து, ஒட்சிசன் அளவு அதிகரிக்கின்றது. இவை இரண்டாவது நன்மைகள்.

24 மணிநேரத்தின் பின்னர் மாரடைப்புக்கான வாய்ப்பு குறையத் தொடங்குகின்றது.

03 மாதத்திற்குள் நுரையீரலின் செயலாற்றல் 30% கூடுகின்றது. ஐந்து வருடத்தில் நுரையீரல் புற்றுநோய்க்கான வாய்ப்பு 50% குறைகின்றது.

10-15 ஆண்டுகள் வரை புகைப் பிடிக்காமல் இருந்தால் புகைப் பிடிக்காமல் இருப்பவர்களின் ஆரோக்கியத்தைப் பெற்றுவிட முடியும் என்று ஆராய்ச்சிகள் தெரிவித்துள்ளன.



பயங்கரவாத தாக்குதல்கள் எதிர்கொள்ளப்படுவதால் அமெரிக்காவின் நியூயோர்க் நகரில் சோதனைகளில் ஈடுபடும் பொலிசார்.

# பொதுத் தேர்தல் 2004

# இதுவரை கிடைக்கப் பெற்ற முடிவுகள்

## மாவட்டம்: திருகோணமலை

| தொகுதி | தமிழரசு | முஸ்.காங்கிரஸ் | ஐ.ம.சு.மு | ஐ.தே.மு | ஹெல உ.று | மொத்த வாக்குகள் | பதிவான வாக்குகள் | செல்லுபடியான வாக்குகள் |
|---|---|---|---|---|---|---|---|---|
| சேருவில | 6178 | 4647 | 19607 | 10346 | 563 | 63161 | 43944 | 41520 |
| திருகோணமலை | 43880 | 13378 | 6229 | 3193 | 119 | 86277 | 70420 | 67347 |
| மூதூர் | 17005 | 45523 | 1554 | 689 | 42 | 74869 | 68505 | 65425 |
| மொத்தம் | | | | | | | | |
| ஆசனங்கள் | | | | | | | | |

## மாவட்டம்: பதுளை

| தொகுதி | ஐ.ம.சு.மு | ஐ.தே.க | ஹெல உறுமய | லலித் மு | சுயேட்சை 07 | மொத்த வாக்குகள் | பதிவான வாக்குகள் | செல்லுபடியான வாக்குகள் |
|---|---|---|---|---|---|---|---|---|
| மகியங்கனை | 27727 | 23822 | 363 | 89 | 58 | 74365 | 55733 | 522921 |
| வியாலுவ | 14805 | 12874 | 21 | - | 51 | 429251 | 30704 | 28148 |
| பசறை | 21016 | 13379 | 279 | - | - | 52719 | 35397 | 31025 |
| பதுளை | 15103 | 15825 | 1586 | - | - | 46872 | 34711 | 32731 |
| ஊவாபரணகம | 19946 | 18030 | 357 | - | - | 53690 | 41974 | 38699 |
| ஹாலிஎல | 17926 | 19125 | - | 81 | - | | | |
| வெலிமட | 23040 | 20441 | 775 | | - 32 | 62308 | 48373 | 44522 |
| பண்டாரவளை | 21783 | 23791 | 1343 | - | 44 | 67710 | 51128 | 47348 |
| அப்புத்தளை | 15499 | 21258 | 639 | - | - | 54797 | 41183 | 37708 |
| மொத்தம் | 178634 | 181705 | 6932 | 647 | 329 | 511115 | 400337 | 370178 |
| ஆசனங்கள் | 03 | 05 | | | | | | |

## மாவட்டம்: அநுராதபுரம்

| தொகுதி | ஐ.ம.சு.மு | ஐ.தே.மு | ஹெல உறுமய | ஐ.சோ. கட்சி | புதிய இடதுசாரி | மொத்த வாக்குகள் | பதிவான வாக்குகள் | செல்லுபடியான வாக்குகள் |
|---|---|---|---|---|---|---|---|---|
| மதவாச்சி | 27978 | 17809 | 484 | 198 | 09 | 68827 | 48934 | 46573 |
| ஹொரவ்பொத்தான | 24924 | 18231 | 500 | 244 | 10 | 65482 | 46322 | 44013 |
| அ'புரம் கிழக்கு | | | | | | | | |
| அ'புரம் மேற்கு | 28821 | 23876 | 1260 | 254 | 26 | 81435 | 57872 | 54421 |
| கலாவேவ | 42639 | 26744 | 1314 | 242 | 41 | 102138 | 75577 | 71123 |
| மிகிந்தல | 21008 | 14336 | 602 | 132 | 17 | 52770 | 38431 | 36178 |
| கெக்கிராவ | 24446 | 19606 | 1167 | 186 | | 66036 | 48271 | 45546 |
| மொத்தம் | | | | | | | | |
| ஆசனங்கள் | | | | | | | | |

## மாவட்டம்: இரத்தினபுரி

| தொகுதி | ஐ.ம.சு.மு | ஐ.தே.மு | ஹெல உறுமய | ஐ.சோ. கட்சி | புதிய இடதுசாரி | மொத்த வாக்குகள் | பதிவான வாக்குகள் | செல்லுபடியான வாக்குகள் |
|---|---|---|---|---|---|---|---|---|
| எகிலியகொட | 31341 | 24934 | 3142 | 104 | 944 | 81652 | 63984 | 60764 |
| இரத்தினபுரி | 37386 | 29670 | 5605 | 67 | 79 | 97357 | 77139 | 73213 |
| பெல்மதுல்ல | 23403 | 22742 | 1979 | 100 | 50 | 63302 | 51582 | 48513 |
| பலாங்கொட | 32042 | 27685 | 2364 | 87 | 81 | 85285 | 66871 | 62531 |
| இறக்குவானை | 29504 | 28453 | 1644 | 74 | | 81393 | 63379 | 59979 |
| நிவெற்றிக்கல | 32331 | 25321 | 1076 | 65 | 95 | 75915 | 62240 | 59106 |
| கலவானை | 22501 | 15726 | 660 | 64 | 26 | 50558 | 41442 | 39120 |
| கொலன்ன | 48051 | 28117 | 3749 | | | 111570 | 85241 | 80446 |
| மொத்தம் | | | | | | | | |
| ஆசனங்கள் | | | | | | | | |

## மாவட்டம்: கொழும்பு

| தொகுதி | ஐ.தே.க | ஐ.ம.சு.மு | ஹெல உறுமய | புதிய இ.மு | ஜாதிக பெரமுன | மொத்த வாக்குகள் | பதிவான வாக்குகள் | செல்லுபடியான வாக்குகள் |
|---|---|---|---|---|---|---|---|---|
| கொழும்புவடக்கு | 40387 | 12724 | 3409 | 176 | 415 | 86388 | 60959 | 57528 |
| கொழும்புமத்தி | 71599 | 17687 | 8881 | 225 | 117 | 159763 | 15593 | 10142 |
| பொரளை | 21543 | 12484 | 6360 | 89 | 103 | 62722 | 42650 | 40893 |
| கொழும்புகிழக்கு | 23739 | 12141 | 9116 | 166 | 91 | 67885 | 47265 | 45576 |
| கொழும்புமேற்கு | 19084 | 3613 | 2824 | 150 | 44 | 40209 | 26783 | 25914 |
| தெகிவளை | 19865 | 12577 | 9247 | 142 | 63 | 60159 | 43260 | 42687 |
| இரத்மலானை | 18448 | 19284 | 9085 | 86 | 71 | 67176 | 48733 | 67176 |
| கொலனாவ | 29540 | 32976 | 14311 | 106 | 194 | 163035 | 80362 | 77530 |
| கோட்டை | 19635 | 20070 | 13192 | 95 | 140 | 74159 | 54772 | 53359 |
| கடுவெல | | | | | | | | |
| அவிசாவளை | | | | | | | | |
| ஹோமாகம | 29229 | 49520 | 17768 | 129 | | 135242 | 100577 | 97061 |
| மகரகம | 22385 | 37919 | 25385 | 160 | 177 | 118318 | 88488 | 86327 |
| கெஸ்பாவ | 26302 | 45939 | 29850 | 121 | | 137385 | 105773 | 102942 |
| மொரட்டுவ | 34313 | 38833 | 13493 | | | 114454 | 90515 | 87376 |
| மொத்தம் | | | | | | | | |
| ஆசனங்கள் | | | | | | | | |

## மாவட்டம்: அம்பாந்தோட்டை

| தொகுதி | ஐ.ம.சு.மு | ஐ.தே.க. | புதிய இடதுசாரி | | | மொத்த வாக்குகள் | பதிவான வாக்குகள் | செல்லுபடியான வாக்குகள் |
|---|---|---|---|---|---|---|---|---|
| பெலியத்த | 32017 | 17031 | 39 | | | | | |
| அம்பாந்தோட்டை | 48744 | 22472 | 68 | | | 98376 | 75540 | 71523 |
| முல்கிரிகல | 34604 | 22582 | 86 | | | 85563 | 62006 | 57568 |
| திஸ்ஸமகாரகம | 57861 | 33449 | | | | 128377 | 98098 | 91787 |
| மொத்தம் | 178895 | 98872 | | | | 384369 | 297024 | 279310 |
| ஆசனங்கள் | 05 | 02 | | | | | | |

## மாவட்டம்: கேகாலை

| தொகுதி | ஐ.ம.சு.மு | ஐ.தே.மு | ஹெல உறுமய | | | மொத்த வாக்குகள் | பதிவான வாக்குகள் | செல்லுபடியான வாக்குகள் |
|---|---|---|---|---|---|---|---|---|
| டெடிகம | 22909 | 18693 | 1713 | | | 60550 | 45938 | 43565 |
| கலிமமுவ | 28964 | 26328 | 2095 | | | 78357 | 60780 | 57648 |
| கேகாலை | 23778 | 17505 | 2834 | | | 62561 | 46383 | 44307 |
| இறம்புக்கணை | 22187 | 16158 | 2256 | | | 58588 | 43793 | 41477 |
| மாவனல்ல | 23290 | 26280 | 3151 | | | 76113 | 55727 | 52274 |
| அரநாயக்க | 16913 | 15321 | 1408 | | | 48831 | 35184 | 33862 |
| எட்டியாந்தோட்டை | 22081 | 21500 | 1083 | | | 64170 | 48876 | 44966 |
| றுவான்வெல்ல | 24746 | 19950 | 1760 | | | 64110 | 49643 | 46973' |
| தெரனியாகல | 20436 | 18881 | 824 | | | 57117 | 43971 | 40387 |
| மொத்தம் | 214267 | 186641 | | | | 570299 | 446816 | 421131 |
| ஆசனங்கள் | 05 | 04 | | | | | | |

## மாவட்டம்: அம்பாறை

| தொகுதி | ஐ.ம.சு.மு | மு.காங் | தமிழரசு | ஐ.தே.மு | ஹெல உறுமய | மொத்த வாக்குகள் | பதிவான வாக்குகள் | செல்லுபடியான வாக்குகள் |
|---|---|---|---|---|---|---|---|---|
| சம்மாந்துறை | 19117 | 17688 | 8976 | 1664 | 178 | 63166 | 50894 | 47933 |
| கல்முனை | | | | | | | | |
| பொத்துவில் | | | | | | | | |
| அம்பாறை | | | | | | | | |
| மொத்தம் | | | | | | | | |
| ஆசனங்கள் | | | | | | | | |

## மாவட்டம்: மட்டக்களப்பு

| தொகுதி | தமிழரசு | முஸ்லிம் காங்கிரஸ் | ஐ.ம.சு.மு | ஐ.தே.மு | ஈ.பி.டி.பி | மொத்த வாக்குகள் | பதிவான வாக்குகள் | செல்லுபடியான வாக்குகள் |
|---|---|---|---|---|---|---|---|---|
| கல்குடா | 43503 | 22244 | 2706 | 1354 | 568 | 86626 | 74645 | 70783 |
| பட்டிருப்பு | 57052 | 652 | 299 | 877 | 821 | 76112 | 63243 | 60118 |
| மொத்தம் | | | | | | | | |
| ஆசனங்கள் | | | | | | | | |
| | | | | | | | | |

## மாவட்டம்: மொனராகலை

| தொகுதி | ஐ.ம.சு.மு | ஐ.தே.மு | ஹெல உறுமய | ஐ.லலித் முன்னணி | புதிய இடதுசாரி | மொத்த வாக்குகள் | பதிவான வாக்குகள் | செல்லுபடியான வாக்குகள் |
|---|---|---|---|---|---|---|---|---|
| பிபில | 27149 | 17851 | 293 | 82 | 13 | 65934 | 48782 | 45577 |
| மொனராகல | 34503 | 21593 | 586 | 78 | 26 | 83154 | 61138 | 56996 |
| வெல்லவாய | 51137 | 29802 | 1618 | 112 | 34 | 113614 | 87501 | 82205 |
| மொத்தம் | 117456 | 71067 | 2675 | 275 | 76 | 262742 | 204929 | 192113 |
| ஆசனங்கள் | 3 | 2 | - | - | - | - | - | - |

## மாவட்டம்: யாழ்ப்பாணம்

| தொகுதி | தமிழரசு | ஈ.பி.டி.பி | சுயே-1 ஆனந்த சங்கரி | மு.கா | | மொத்த வாக்குகள் | பதிவான வாக்குகள் | செல்லுபடியான வாக்குகள் |
|---|---|---|---|---|---|---|---|---|
| ஊர்காவற்றுறை | 13911 | 1406 | 51 | 41 | | 51911 | 16736 | 15454 |
| வட்டுக்கோட்டை | 24240 | 1513 | 485 | 09 | | 61283 | 28901 | 26358 |
| காங்கேசன்துறை | 18499 | 2395 | 405 | 07 | | 64434 | 23017 | 21386 |
| மானிப்பாய் | 23779 | 3239 | 980 | 11 | | 65218 | 30426 | 28158 |
| கோப்பாய் | 26805 | 2108 | 453 | 16 | | 61403 | 31940 | 29495 |
| உடுப்பிட்டி | 24172 | 874 | 561 | - | | 54087 | 27463 | 25507 |
| பருத்தித்துறை | 22400 | 676 | 248 | 02 | | 45457 | 24400 | 23372 |
| சாவகச்சேரி | 30882 | 1252 | 492 | 08 | | 57379 | 35690 | 32724 |
| நல்லூர் | 22321 | 2431 | 800 | 14 | | 67672 | 27124 | 25659 |
| யாழ்ப்பாணம் | 16353 | 1710 | 360 | 151 | | 57460 | 19750 | 18630 |
| கிளிநொச்சி | 29574 | 145 | 171 | 07 | | 57975 | 32152 | 29939 |
| மொத்தம் | | | | | | | | |
| ஆசனங்கள் | | | | | | | | |

## மாவட்டம்: மாத்தளை

| தொகுதி | ஐ.ம.சு.மு | ஐ.தே.மு | ஹெல உறுமய | சோசலிச கட்சி | | மொத்த வாக்குகள் | பதிவான வாக்குகள் | செல்லுபடியான வாக்குகள் |
|---|---|---|---|---|---|---|---|---|
| தம்புள்ள | 40616 | 29456 | 1982 | 264 | | 107353 | 79565 | 72660 |
| லக்கல | 21307 | 18884 | 579 | 270 | | 58799 | 44664 | 41066 |
| மாத்தளை | 18496 | 24058 | 3135 | 31 | | 69860 | 50176 | 46266 |
| இரத்தோட்டை | 22747 | 25330 | 2611 | 383 | | 76544 | 56388 | 51429 |
| மொத்தம் | 180251 | 100642 | 8119 | 1135 | | 312556 | 239611 | 220062 |
| ஆசனங்கள் | 03 | 02 | | | | | | |

## மாவட்டம்: பொலநறுவ

| தொகுதி | ஐ.ம.சு.மு | ஐ.தே.க | ஹெல உறுமய | சோசலிச கட்சி | | மொத்த வாக்குகள் | பதிவான வாக்குகள் | செல்லுபடியான வாக்குகள் |
|---|---|---|---|---|---|---|---|---|
| மின்னேரியா | 30342 | 17522 | 850 | 152 | | 70308 | 52715 | 48965 |
| மெதிரிகிரிய | 26116 | 20522 | 388 | 182 | | 66605 | 50311 | 47276 |
| பொலநறுவை | | | | | | | | |
| மொத்தம் | | | | | | | | |
| ஆசனங்கள் | | | | | | | | |

## மாவட்டம்: மாத்தறை

| தொகுதி | ஐ.ம.சு.மு | ஐ.தே.மு | ஹெல உறுமய | ஐ.சோ. கட்சி | | மொத்த வாக்குகள் | பதிவான வாக்குகள் | செல்லுபடியான வாக்குகள் |
|---|---|---|---|---|---|---|---|---|
| தெனியாய | 33051 | 23262 | 1197 | 376 | | 80159 | 62747 | 58102 |
| ஹக்மன | 34158 | 18582 | 1421 | 226 | | 79918 | 58479 | 54633 |
| அக்குரஸ்ச | 35747 | 27318 | 1733 | 253 | | 82330 | 62709 | 59282 |
| கம்புறுப்பிட்டிய | 31927 | 16879 | 1988 | | | 74434 | 54098 | 51140 |
| தெவிநுவர | 30360 | 16423 | 2331 | | | 71812 | 51856 | 49451 |
| வெலிகம | 34824 | 19996 | 2462 | 204 | | 83288 | 61139 | 57717 |
| மாத்தறை | 32967 | 19458 | 4309 | | | 78465 | 59090 | 51091 |
| மொத்தம் | 241235 | 139633 | | | | 550506 | 423062 | 400233 |
| ஆசனங்கள் | 05 | 03 | | | | | | |

## மாவட்டம்: நுவரெலியா

| தொகுதி | ஐ.தே.மு | ஐ.ம.சு.மு | ஹெல உறுமய | மலையக ம.சுதந்திர மு. | ஜனநாயக கட்சி | மொத்த வாக்குகள் | பதிவான வாக்குகள் | செல்லுபடியான வாக்குகள் |
|---|---|---|---|---|---|---|---|---|
| நுவ.மஸ்கெலியா | | | | | | | | |
| ஹங்குரான்கெற்ற | 29313 | 16962 | 630 | 4182 | 1963 | 61868 | 47929 | 43797 |
| கொத்மலை | 25390 | 15964 | 593 | 4182 | 1553 | 65044 | 50838 | 47942 |
| வலப்பன | 22768 | 20607 | 395 | 3170 | 1697 | 69813 | 53119 | 49091 |
| மொத்தம் | | | | | | | | |
| ஆசனங்கள் | | | | | | | | |

## மாவட்டம்: குருநாகல்

| தொகுதி | ஐ.ம.சு.மு | ஐ.தே.க | ஹெல உறுமய | | | மொத்த வாக்குகள் | பதிவான வாக்குகள் | செல்லுபடியான வாக்குகள் |
|---|---|---|---|---|---|---|---|---|
| கல்கமுக | 36037 | 25377 | 795 | | | 88822 | 65444 | 62381 |
| நிக்கரவெட்டிய | 29542 | 22885 | 1427 | | | 80736 | 58185 | 54099 |
| யாப்பகூவ | 37055 | 28281 | 1387 | | | 96817 | 70300 | 67029 |
| ஹிரியல்ல | 26607 | 25167 | 2740 | 34 | 63 | 83532 | 58082 | 54356 |
| வாரியப்பொல | 24886 | 19554 | 1569 | | | 65847 | 48778 | 46155 |
| பண்டுவஸ்நுவர | | | | | | | | |
| டிங்கிரியா | | | | | | | | |
| கட்டுகம்பொல | 31388 | 24936 | 3212 | | | 83645 | 62788 | 59767 |
| குளியாப்பிட்டி | 29878 | 27127 | 3413 | | 103 | 86416 | 64187 | 60702 |
| தம்பதெனிய | | | | | | | | |
| பொல்காவல | | | | | | | | |
| குருநாகல் | 23472 | 23242 | 5347 | | | 74368 | 54414 | 58325 |
| மாவத்தகம | 24974 | 23158 | 3391 | | | 75264 | 54614 | 51861 |
| தொடங்கஸ்வத்த | 21393 | 22142 | 1803 | | | 64979 | 47793 | 45474 |
| மொத்தம் | | | | | | | | |
| ஆசனங்கள் | | | | | | | | |

## மாவட்டம்: கண்டி

| தொகுதி | ஐ.தே.க | ஐ.ம.சு.மு | ஹெல உறுமய | | | மொத்த வாக்குகள் | பதிவான வாக்குகள் | செல்லுபடியான வாக்குகள் |
|---|---|---|---|---|---|---|---|---|
| கலகெதர | 16645 | 15896 | 1513 | | | 49964 | 36864 | 34241 |
| ஹரிஸ்பத்துவ | 46572 | 27086 | 7039 | | | 133406 | 99066 | 92078 |
| பாத்துதும்பறை | 26230 | 16071 | 2946 | | | 69554 | 49786 | 45536 |
| உடுதும்பறை | 15285 | 18319 | 387 | | | 51361 | 37798 | 34049 |
| தெல்தெனியா | 13380 | 13341 | 674 | | | 39730 | 30188 | 27503 |
| குண்டசாலை | 24807 | 23918 | 3896 | | | 74784 | 56514 | 52907 |
| கேவாகெற்ற | | | | | | | | |
| செங்கடகல | 22435 | 17403 | 6091 | | | 66995 | 48767 | 46338 |
| மாநுவர | 14357 | 7342 | 3959 | | | 36760 | 26782 | 25659 |
| யட்டிநுவர | | | | | | | | |
| உடுநுவர | 23413 | 21739 | 3678 | | | 69844 | 52154 | 49155 |
| கம்பளை | | | | | | | | |
| நாலப்பிட்டிய | | | | | | | | |
| மொத்தம் | | | | | | | | |
| ஆசனங்கள் | | | | | | | | |

## மாவட்டம்: புத்தளம்

| தொகுதி | ஐ.ம.சு.மு | ஐ.தே.மு | ஹெல உறுமய | | | மொத்த வாக்குகள் | பதிவான வாக்குகள் | செல்லுபடியான வாக்குகள் |
|---|---|---|---|---|---|---|---|---|
| ஆனமடுவ | 33715 | 22547 | 1221 | | | 92596 | 63550 | 57789 |
| புத்தளம் | 20069 | 34273 | 303 | | | 90004 | 59934 | 55067 |
| சிலாபம் | 31124 | 29934 | 2352 | | | 98384 | 68018 | 63849 |
| நாத்தாண்டியா | 25270 | 20461 | 2466 | | | 76077 | 51477 | 48524 |
| வென்னப்புவ | 29042 | 25378 | | | | 92966 | 61495 | 57953 |
| மொத்தம் | | | | | | | | |
| ஆசனங்கள் | | | | | | | | |

## மாவட்டம்: காலி

| தொகுதி | ஐ.ம.சு.மு | ஐ.தே.மு | ஹெல உறுமய | லலித் முன்னணி | | மொத்த வாக்குகள் | பதிவான வாக்குகள் | செல்லுபடியான வாக்குகள் |
|---|---|---|---|---|---|---|---|---|
| பலப்பிட்டிய | 18002 | 14117 | 1944 | 37 | | 48387 | 35706 | 34117 |
| அம்பலாங்கொட | 26435 | 17289 | 2544 | 25 | | 63425 | 48963 | 46585 |
| கரந்தெனிய | 29807 | 14377 | 1187 | | | | | |
| பெத்தரஎல்பிட்டிய | 34740 | 22243 | 8411 | 45 | | 80943 | 63119 | 59750 |
| ஹினிதும | 38533 | 27440 | 1119 | 82 | | 86343 | 71854 | 67483 |
| பத்தேகம | 35936 | 24572 | 1368 | | | 83381 | 67096 | 62364 |
| ரக்கம | 29413 | 19408 | 2267 | 49 | | 73009 | 54768 | 51352 |
| காலி | 20879 | 23585 | 4166 | | | 70204 | 51106 | 48879 |
| அக்மீமன | 30897 | 21249 | 395 | 42 | | 76101 | 58534 | 55527 |
| ஹபராதுவ | 30648 | 19417 | 1667 | 51 | | 78566 | 55105 | 51970 |
| மொத்தம் | | | | | | | | |
| ஆசனங்கள் | | | | | | | | |

## மாவட்டம்: களுத்துறை

| தொகுதி | ஐ.ம.சு.மு | ஐ.தே.க | ஹெல உறுமய | ஐ.சோசலிச | புதிய இடதுசாரி | மொத்த வாக்குகள் | பதிவான வாக்குகள் | செல்லுபடியான வாக்குகள் |
|---|---|---|---|---|---|---|---|---|
| பாணந்துறை | 35687 | 24020 | 14274 | 79 | 113 | 99741 | 77549 | 74309 |
| பண்டாரகம | 41850 | 27240 | 8980 | | | 104091 | 82231 | 78405 |
| புளசிங்கள | 33939 | 26456 | 2538 | | | 88142 | 67911 | 63246 |
| மத்துகம | 36294 | 24912 | 4542 | 40 | 35 | 90919 | 70030 | 66030 |
| களுத்துறை | 37958 | 26255 | 8324 | 118 | | 99940 | 76620 | 72854 |
| பேருவல | 33583 | 30210 | 6851 | | | 96897 | 74785 | 70883 |
| அகலவத்த | 25374 | 22767 | 2631 | | | 69720 | 54711 | 50987 |
| கொரண | 38421 | 26764 | 7166 | 41 | 54 | 96686 | 76773 | 72666 |
| மொத்தம் | | | | | | | | |
| ஆசனங்கள் | 06 | 03 | 01 | | | | | |

## மாவட்டம்: கம்பகா

| தொகுதி | ஐ.தே.மு | ஐ.ம.சு.மு | ஹெல உறுமய | ஐ.சோ. கட்சி | புதிய இடதுசாரி | மொத்த வாக்குகள் | பதிவான வாக்குகள் | செல்லுபடியான வாக்குகள் |
|---|---|---|---|---|---|---|---|---|
| வத்தளை | 34041 | 28344 | 4525 | 233 | 102 | 91912 | 70592 | 67837 |
| நீர்கொழும்பு | 33709 | 24357 | 1759 | 277 | 148 | 88773 | 63567 | 60725 |
| கட்டாண | 31919 | 41823 | 6254 | 282 | 98 | 110706 | 84453 | 81185 |
| நிவிலுப்பிட்டிய | 26267 | 34257 | 5666 | | | 90352 | 69731 | 66847 |
| மீரிகம | 27923 | 39853 | 6775 | 269 | 46 | 104222 | 78436 | 74759 |
| மினுவாங்கொட | 28632 | 41026 | 9292 | 248 | 63 | 107679 | 82878 | 79799 |
| அத்தனகல | 24282 | 45529 | 8731 | 237 | 54 | 109731 | 83008 | 79155 |
| கம்பகா | 24652 | 51944 | 11357 | 116 | 53 | 120833 | 92082 | 88597 |
| ஜா-எல | 34248 | 42453 | 6009 | 236 | 97 | 113559 | 86813 | 83816 |
| மகர | 27072 | 47598 | 11194 | 178 | 76 | 117876 | 89692 | 86514 |
| தொம்பே | 23111 | 40327 | 3943 | 192 | 26 | 94755 | 72958 | 69885 |
| களணி | 21450 | 25777 | 10956 | 147 | 51 | 80329 | 61149 | 58753 |
| மொத்தம் | 267572 | 509963 | 102516 | | | | | |
| ஆசனங்கள் | 03 | 06 | 01 | | | | | |

# வெளியான 10 மாவட்ட தேர்தல் முடிவுகளில் ஐ.ம.சு.முன்னணிக்கு அதிகப்படி ஆசனங்கள்!

(கொழும்பு)

இலங்கையின் 13வது நாடாளுமன்றத்திற்கான தேர்தல் முடிவுகள் பத்து மாவட்டங்களுக்கு அறிவித்துள்ள நிலையில் ஏனைய மாவட்டங்களுக்கான முடிவுகளை அறிவிப்பதை நேற்று மாலை முதல் தேர்தல் ஆணையாளர் நிறுத்திவைத்துள்ளார்.

இதில் ஒரு மாவட்டத்தைத் தவிர ஏனைய ஒன்பது மாவட்டங்களிலும் ஐக்கிய மக்கள் சுதந்திர முன்னணி முன்னிலை வகிக்கின்றது. இதன் மூலம் ஐ.ம.சு முன்னணி 47 ஆசனங்களையும், ஐக்கிய தேசிய முன்னணி 32 ஆசனங்களையும் ஜாதிக ஹெலஉறுமய 3 ஆசனங்களையும் பெற்றுள்ளன.

# பாரதூரமற்ற 1500 வன்முறைகள் இடம் பெற்றதாக நேற்று அறிவிப்பு

## -ஐரோப்பிய கண்காணிப்புக்குழு அறிக்கை

(கொழும்பு)

தேர்தல் வாக்களிப்புக்களின் போது சுமார் 1500 வன்முறைகள் இடம்பெற்றுள்ளன. அவை பாரதூரமற்றவை எனினும் இவ்வாறான வன்முறைகள்இடம்பெறாமல் இருக்க நடவடிக்கை எடுக்கவேண்டும் என தேர்தல் கண்காணிப்புக்களில் ஈடுபட்ட ஐரோப்பிய ஒன்றியத்தின் தலைமை கண் காணிப்பாளர் ஜோன் குஸ்னகன் தெரிவித்துள்ளார்.

வடக்குக் கிழக்கில் தேர்தல் வேட்பாளர்கள் சுயாதீனமாகபிரசாரங்களில் ஈடுபடமுடியாமை வருந்தத்தக்க விடயம் என்ற போதும் ஊரடங்குச் சட்டம் அமுல் செய்யப்படாமல் தேர்தல் நடவடிக்கைகள் நடைபெற்றமையானது, தேர்தலின் நீதித் தன்மையும் சிறப்பான, ஆணையாளரின் நடவடிக்கைகளையும் வெளிக்காட்டுவதாக அவர் குறிப்பிட்டுள்ளார் (32)

# வன்னி வேளாண் தொழில்நுட்ப நிறுவனத்தினரும், மல்ரிபிளெக்ஸ் கம்பனியும் இணைந்து நடாத்தும் விவசாய உள்ளீடுகள் பற்றிய கருத்தூட்டல் நிகழ்வுக்கான கால அட்டவணை

உயர் விளைவுக்கும், சூழல் மாசடையாதிருக்கவும் உடல் நலத்துக்கான உணவு உற்பத்தியைப் பெறவும் அவசியம் பாவிக்கவேண்டியவைதான் “மல்ரிபிளெக்ஸ்” நுண்ணூட்டச்சத்துள்ள பசளை, நுண்மூலக மருந்துக்கள்.

வேளாண் செய்கையில் ஒரு புரட்சிகரமான மாற்றம் தான் “மல்ரிபிளெக்ஸ்” பசளை, மருந்துப்பாவனை, இது தொடர்பானகருத்தூட்டல் நிகழ்வு கீழ்க்குறிப்பிடப்படும் கால அட்டவணைப்படி நடைபெறவுள்ளது. கர்நாடக மாநில “மல்ரிபிளெக்ஸ்” கம்பனியின் விவசாய விஞ்ஞானிகள் இதில் கலந்து கொள்ளவுள்ளனர். இப்பயன்தரு கருத்தூட்டல் நிகழ்வில் அனைத்து வேளாண் செய்கையாளர்களும் கலந்து எம்தேச பொருளாதாரத்தை மேம்படுத்த உதவுமாறு அன்புடன்அழைக்கின்றனர்.

## வன்னி வேளாண் தொழில்நுட்ப நிறுவனம்

கண்டிச்சாலை கிளிநொச்சி.

| நாள் | நேரம் | பிரதேசங்கள் | இடம் |
|---|---|---|---|
| 06.04.2004 | மு.ப 11.30 - 2.00 | கிளிநகர்1, 2, 3, 4, 5, 6, ம் வாய்க்கால். உருத்திரபுரம். | கிளிமகாவித்தியாலயம் |
| 06.04.2004 | பி.ப 3.00 - 5.00 | வட்டக்கச்சி, இராமநாதபுரம். | இராமநாதபுரம் மேற்கு அ.த.பாடசாலை |
| 06.04.2004 | பி.ப 6.00 - 8.00 | முரசுமோட்டை, தருமபுரம், கண்டாவளை, புளியம்பொக்கணை. | முரசுமோட்டை முருகானந்தா ம.வி |
| 07.04.2004 | மு.ப 8.30 -11.30 | தண்ணீருற்று, முள்ளியவளை, குமுழமுனை, அளம்பில். | குமுழமுனை மகாவித்தியாலயம். |
| 07.04.2004 | பி.ப 1.00 - 2.30 | நெடுங்கேணி. | நெடுங்கேணி மகாவித்தியாலயம் |
| 07.04.2004 | பி.ப 3.00 - 5.00 | ஒட்டுசுட்டான், முத்தையன்கட்டு. | கற்சிலைமடு அ.த.க.பாடசாலை. |
| 07.04.2004 | பி.ப 6.00 - 8.00 | உடையார்கட்டு, விசுவமடு, பிரமந்தனாறு. | விசுவமடு மகாவித்தியாலயம். |
| 08.04.2004 | காலை 7.00 - 9.00 | அக்கராயன், கோணாவில், ஸ்கந்தபுரம், வன்னேரி. | ஸ்கந்தபுரம் 1வது பாடசாலை. |
| 08.04.2004 | பி.ப 10.00 - 12.00 | பாண்டியன்குளம், துணுக்காய், வவுனிக்குளம். | யோகபுரம் மகாவித்தியாலயம் |
| 08.04.2004 | பி.ப 1.00 - 2.30 | முழங்காவில், பல்லவராயன்கட்டு. | முழங்காவில் மகாவித்தியாலயம். |
| 08.04.2004 | பி.ப 3.00 - 5.00 | ஆண்டான்குளம், இலுப்பைக்கடவை, பெரியமடு. | ஆண்டான்குளம் மகாவித்தியாலயம். |



THE VANNI AGROTECHS

THIRTY YEARS OF FRUITFUL SERVICE FOR 30 YEARS ESTD 1974

multiplex®

MULTIMICRONUTRIENTS FERTILIZER

(சி9434)



## சிந்தனைக்கு

விடுதலைப் புலிகள் மக்களிலிருந்து வேறுபட்டவர்கள் அல்ல; விடுதலைப் புலிகள் ஒரு மக்கள் இயக்கம்; புலிகள் தான் மக்கள்; மக்கள்தான் புலிகள்.

தமிழீழத்தேசியத் தலைவர்.

ஈழநாதம்
மக்கள் நாளிதழ்
யாழ். சாலை, கிளிநொச்சி. 04-04-2004

## தீர்க்கமான பதில்!

சிறிலங்கா பாராளுமன்றத் தேர்தல் முடிவுகள் வெளிவந்து கொண்டிருக்கின்றன. இனி யார் ஆட்சி அமைப்பது என்பது குறித்த விவகாரமே முதன்மையானதாகும். ஆனால், யார் ஆட்சி அமைப்பதாக இருப்பினும் தமிழ் மக்கள் இம்முறை தேர்தல் மூலம் தமது உணர்வுகளைத் தெளிவாக வெளிப்படுத்தியுள்ளனர் என்பதை சகலரும் முதலில் புரிந்துகொள்ளுதல் வேண்டும்.

தேர்தல் முடிவுகளின் படி விகிதாசார தேர்தல் முறையில் சாதிக்கமுடியாததொன்றைச் சாதித்துள்ளனர் என்று கூடக் கொள்ளலாம். அதாவது பல கட்சிகள் போட்டியிட்ட நிலையில் வடக்கு-கிழக்கில் மிக உயர்ந்தளவில் ஆசனங்களைப் பெற்றுக்கொண்டுள்ளமையே இச் சாதனையாகும். சுருக்கமாகக் கூறுவதானால் வடக்கு-கிழக்கில் பல கட்சிகள் பங்கேற்கும் விகிதாசாரத் தேர்தல் ஒன்றில் இதனைவிட அதிகளவிலான பாராளுமன்ற ஆசனங்களைத் தேர்தல் மாவட்டங்களில் இருந்து பெற்றுக்கொள்ள முடியுமா? என்பது கேள்விக்குரியதே.

குறிப்பாக யாழ். தேர்தல் மாவட்டத்தில் இருந்து எட்டும், வன்னித் தேர்தல் மாவட்டத்தில் இருந்து ஐந்தும், திருமலை மாவட்டத்தில் இருந்து இரண்டும் பெற்றுக்கொண்டமையானது ஒரு வரலாற்றுச் சாதனையே ஆகும். அதேவேளை யாழ். தேர்தல் மாவட்டத்தில் ஒரு ஆசனமானது கைமாறியமையானது முற்றிலுமாக விகிதாசாரத் தேர்தல் பிரதிநிதித்துவம் அவ் ஆசனத்தைப் பெற்றோருக்கு வழங்கிய கொடையே ஆகும்.

அவ்வாறு இல்லாது விடில் யாழ்.தேர்தல் மாவட்டத்திலுள்ள தொகுதிகளில் ஒன்றில்தானும் வெற்றிபெறாதது மட்டுமல்ல, ஒரு தொகுதியில் தானும் பன்னிரெண்டு சதவீத வாக்குகளைக் கூட பெறாத ஒரு கட்சி அதிலும் பல தொகுதிகளில் 5 சதவீதத்திற்கும் குறைவான வாக்குகளைப் பெற்ற கட்சி ஒரு ஆசனத்தைப் பெற்றுக் கொள்வதற்கான வாய்ப்புக் கிடைக்கப்பெறுகின்றதெனில் அது விகிதாசார தேர்தல் அவர்களுக்கு வழங்கிய கொடை இல்லாமல் வேறென்ன?

இதேவேளை, இத்தேர்தல் முடிவானது தமிழ் மக்கள் தெளிவான முறையில் கொள்கைக்கு வாக்களித்துள்ளனர் என்பதை நிருபணம் செய்வதாகவும் உள்ளது. அதாவது தமிழ் மக்கள் மத்தியில் குழப்பத்தையும், பிளவுகளையும் ஏற்படுத்த மேற்கொள்ளப்பட்ட முயற்சிகள் தோல்வியில் முடிவடைந்துள்ளன.

எடுத்துக்காட்டாக சிங்கள அரசியற் கட்சிகளின் அடிவருடிகளாகவும் அந்நிய சக்திகளின் எடுபிடிகளாகவும் செயற்படுபவர்கள் தமிழர் தேசிய ஐக்கியத்தைச் சிதைப்பதற்கும், குலைப்பதற்கும் மேற்கொள்ளப்பட்ட முயற்சியானது மக்களால் தோற்கடிக்கப்பட்டது.

இதேவேளை, சர்வதேச சமூகத்திற்கும், சிறிலங்கா அரசாங்கத்திற்கும் சில விடயங்களை தமிழ் மக்கள் வெளிப்படுத்தியுள்ளனர்,அன்றி உணர்த்தவிளைந்துள்ளனர் எனலாம். அதாவது தமிழர் தாயகம், தமிழ்த் தேசியம் என்பது கேள்விக்கோ அன்றி விவாதத்திற்கோ உட்படக்கூடியது ஒன்றல்ல என்பதும், விடுதலைப்புலிகளே தமிழ் மக்களின் ஏக பிரதிநிதிகள் என்பதும், தமிழ் மக்களின் தேசியத்தலைவர் பிரபாகரன் அவர்களே என்பதுமே வெளிப்படுத்தப்பட்டவையாகும்.

இதேவேளை விடுதலைப்புலிகள் இயக்கம் முன்வைத்துள்ள இடைக்கால தன்னாட்சி அதிகார சபைக்கான அங்கீகாரத்தை ஆட்சிக்கு வரும் எந்த அரசாங்கமும் கருத்திற்கொள்ளாது போகுமேயானால், இனப்பிரச்சினை விவகாரத்தில் முன்னேற்றகரமான நிலைமை தோன்றும் என எதிர்பார்ப்பதற்கில்லை என்பதும் தேர்தல் மூலம் வெளிப்படுத்தப்பட்டதாகும்.

மறுவளமாக இத்தேர்தல் முடிவானது சர்வதேச சமூகத்தினாலும், ஆவலாக எதிர்பார்க்கப்பட்ட தொன்றாகவே இருந்தது. விடுதலைப்புலிகளை தமிழர் தரப்பின் பிரதிநிதிகளாக ஏற்று சர்வதேச சமூகம் சமாதான முயற்சிகளை மேற்கொண்டிருப்பினும், இத் தேர்தல் விடுதலைப்புலிகளே தமிழ் மக்களின் பிரதிநிதிகள் என்பதை அவர்களுக்கு நிருபணம் செய்வதாக இருந்திருக்கும்.

இந்நிலையானது இனப்பிரச்சினைத் தீர்விற்கு விடுதலைப்புலிகளைத் தவிர வேறு எவருடனும் பேச்சுக்களை நடத்துவதில் பயனில்லை என்பதும், ஏனையோரை இதில் இணைத்துக்கொள்வதென்பது அர்த்தமற்றது என்பதையும் சகலரும் உணர்ந்துகொள்ளவாய்ப்பளிப்பதாக இருக்கும். அதாவது இத் தேர்தல் முடிவானது தமிழ் மக்கள் விடுதலைப் புலிகளின் பின்னால் அணிதிரண்டுள்ளனர் என்பதை தெளிவாகவே உலகிற்கு வெளிக்காட்டியுள்ளது. ஆகையினால் இனி விடுதலைப்புலிகளுடன் பேச்சுவார்த்தை நடத்த யாராவது கேள்வி எழுப்புவார்களேயானால் இனப்பிரச்சினைக்குத் தீர்வை முன்வைக்க அவர்கள் தயாராக இல்லை என்பதையே வெளிப்படுத்துவதாய் இருக்கும்.

# ஐ.தே.க. முக்கியஸ்தர்கள் வெளியேற முயற்சி; ரூபவாஹினி பிரச்சாரத்திற்கு கடும் ஆட்சேபம்!

(கொழும்பு)

ஐக்கிய தேசியக்கட்சியின் முக்கியஸ்தர்கள் நாட்டிலிருந்து வெளியேற முயற்சிகளை எடுத்து வருவதாகவும் பலர் கைது செய்யப்பட்டுள்ளதாகவும் ரூபவாஹினி தொலைக்காட்சி சேவை மூலம் மோசமான பிரச்சாரங்கள் மேற்கொள்ளப்பட்டு வருவதாக ஐக்கிய தேசியக்கட்சியின் பொதுச் செயலாளர் செனரத் கப்புக் கொட்டுவ தேர்தல் ஆணையாளரிடம் முறையிட்டுள்ளார்.

ரூபவாஹினிச் சேவைக்கென தகுதிவாய்ந்த அதிகாரியொருவர் நியமிக்கப்பட்டிருந்தாலும் இந்தச் செயற்பாட்டில் அவரால் சட்டமா அதிபரின் ஆலோசனை பெறப் பட வேண்டும் என உயர் நீதிமன் றம் அண்மையில் வழங்கியிருக் கும் தீர்ப்பின் காரணமாக தகுதி வாய்ந்த அதிகாரியினால் எதுவும் செய்யமுடியாத நிலை இருப்பதாக ஐக்கிய தேசியக் கட்சியின் பொதுச்செயலாளர் மேலும் சுட்டிக்காட்டியுள்ளார்.

ஐக்கிய தேசியக்கட்சியின் முக்கியஸ்தர்கள் நாட்டிலிருந்து வெளியேறி விட்டதாக மாயை ஒன்றை வதந்திச்செய்திகள் மூலம் உருவாக்கித் தேர்தலில் வாக்களிக்கும் மக்களின் மனங்களில் இறுதிநேர மாற்றத்தை உருவாக்குவதற்கு மேற்கொள்ளப்பட்ட முயற்சிகள் குறித்து விசாரணைகள் நடத்தப்பட வேண்டும் என ஐ.தே.க செயலாளர் தேர்தல் ஆணையாளரிடம் மேலும் கேட்டுக்கொண்டுள்ளார்.

# வாக்களிப்பு தினத்தன்று நாடு முழுவதும் 250 வன்முறைச் சம்பவங்கள்

வாக்களிப்பின் போது நேற்று முன்தினம் சுமார் 250 தேர்தல் வன முறைச்சம்பவங்கள் இடம் பெற்றுள்ளதாக தேர்தல் ஆணையாளர் திஸநாயக்க தெரிவித்துள்ளார்.

இவற்றுள் வாக்கு மோசடி, வாக்களிக்கச் சென்றவர்களை தடுத்தமை ஆகியன அடங்குவதாக அவர் மேலும் தெரிவித்துள்ளார்.

மேற்படி மனுத்தாக்கல் செய்யப்பட்ட நாளிலிருந்து நேற்று வரை 1597 தேர்தல் வன்முறைச் சம்பவங்கள் இடம்பெற்றுள்ளமை குறிப்பிடத்தக்கது. இதில் ஐக்கிய மக்கள் சுதந்திர முன்னணியே அதிகளவு முறைப்பாடுகளைச் செய்திருந்தது. அதனோடு அம்பாறை மாவட்டத்திலேயே அதிகளவு முறைப்பாடுகள் கிடைக்கப்பெற்றுள்ளமையும் குறிப்பிடத்தக்கது.

இதேவேளை கடந்த பொதுத் தேர்தல் தினத்தன்று இடம்பெற்ற தேர்தல் வன்முறைகளுடன் ஒப்பிடுகையில் தற்போது தேர்தல் தினத்தன்று நடைபெற்ற வன்முறைகள் மிகவும் குறைவு எனவும் தேர்தல் ஆணையாளர் சுட்டிக்காட்டியுள்ளார்.

# இரு அமைச்சர்களின் புதல்வர்கள் மீதான விசாரணை நீதிமன்றால் ஒத்திவைப்பு

(கொழும்பு)

அமைச்சர் எஸ்.பி திஸாநாயக்கவின் இரு புதல்வர்கள் அமைச்சர் மகிந்த விஜயசேகரவின் புதல்வர் உட்பட ஆறு பேர் மீதான வழக்கு விசாரணை எதிர் வரும் 27 ஆம் திகதி வரை ஒத்திவைக்கப்பட்டுள்ளது.

சனவரி 9 ஆம் திகதி விடுதி ஒன்றில் அமைச்சர் கபீர் ஹாசீமின் உறவினர்கள் மீதும் அமைச்சரின் அலுவலக வாகனம் மீதும் தாக்குதல் நடத்தியதாகவும் வாகனத்தை சேதப்படுத்தியதாகவும் இவர்கள் மீது குற்றம் சாட்டப்பட்டுள்ளது.

கொழும்பு பிரதம நீதவானும் மேலதிக மாவட்ட நீதவானுமான சரத்சீ கருணா ரத்ன முன்னிலையில் இந்த வழக்கு விசாரணை செவ்வாய்க்கிழமை நடைபெற்றது.

வழக்கு விசாரணையுடன் தொடர்புடைய சில அதிகாரிகள் தேர்தல் கடமையின் நிமித்தம் சென்றிருப்பதால் விசாரணையை வேறொரு தினத்திற்கு நடத்துமாறு பொலிசார் நீதவானிடம் வேண்டுகோள் விடுத்தனர். அத்துடன் இச்சம்பவம் தொடர்பாக இரகசிய பொலிசாரின் அறிக்கை சமர்ப்பிக்கவும் அவகாசம் கேட்டிருந்தனர்.

இதனையடுத்து விசாரணையை நீதவான் ஒத்திவைத்துள்ளார்.

## தேர்தல் முடிவில் ஊரடங்குச்சட்டம் அமுல் செய்யவேண்டிய தேவையேற்படவில்லை

*– சிறில. பொலிஸ்மா அதிபர் தெரிவிப்பு*

ஊரடங்குச் சட்டத்தை அமுல்படுத்த வேண்டியதேவை தேர்தல் நடந்த பின்னர் ஏற்படவில்லையென பொலிஸ்மா அதிபர் இந்திராடி சில்வா தெரிவித்துள்ளார். வாக்களிப்பின்போது பாரிய அசம்பாவிதங்கள் எதுவும் ஏற்படவில்லையெனவும் இதனால் நாடளாவிய ரீதியில் ஊரடங்குச் சட்டத்தை அமுல் செய்ய வேண்டிய தேவை ஏற்படவில்லையென அவர் மேலும் தெரிவித்துள்ளார்.

# சிங்கப்பூர் விபச்சார விடுதிகளுக்கு யுவதிகளை அனுப்பியோர் கைது

(கொழும்பு)

மஹரகம பகுதியில் சட்ட விரோதமான முறையில் இயங்கி வந்த தொழில் முகவர் நிலையம் ஒன்றை முற்றுகையிட்ட பொலிசார் அங்கிருந்த 6 நபர்களை கைது செய்துள்ளதுடன் போலிக் கடவுச்சீட்டுக்கள் உட்பட ஆபாச சீடிக்களையும் கைப்பற்றியுள்ளனர்.

குறித்த முகவர் நிலையம் ஊடாக சிங்கப்பூருக்கு அனுப்பி வைக்கப்பட்டிருந்த யுவதி ஒருவர் தான் சிங்கப்பூரில் விபச்சார நடவடிக்கையில் ஈடுபட்டுள்ளதாகவும் இந்த முகவர் நிலையம் மூலம் அனுப்பி வைக்கப்படும் அனைவரும் விபச்சார நடவடிக்கைகளுக்காகவே சிங்கப்பூர் அனுப்பப்படுவதாகவும் பொலிசாரிடம் முறையிட்டதையடுத்தே இந்த மோசடி நடவடிக்கை கண்டுபிடிக்கப்பட்டுள்ளது.

கைது செய்யப்பட்டுள்ள சந்தேக நபர்கள் கிராமங்களுக்குச்சென்று கட்டணங்கள் இன்றி சிங்கப்பூர் அனுப்பி வைப்பதாக யுவதிகளை அழைத்துவந்து இந்த வீட்டில் தங்கவைத்து சிங்கப்பூரிலுள்ள இவ்வாறான விடுதிகளுக்கு அனுப்பி வைத்துள்ளார்கள் என குற்றச்சாட்டுக்கள் சுமத்தப்பட்டுள்ளன.

## ஜோன் ரைட் ஓய்வு பெறுகிறார் புதியவராக கிரேக் செப்பல்?


இந்திய கிரிக்கெட் அணியின் பயிற்சியாளர் ஜோன்ரைட் வரும் மாதத்துடன் விலகவுள்ளார்.

நியூசிலாந் அணியின் முன்னாள் கிரிக்கெட் வீரரான ஜோன் ரைட்ரின் ஒப்பந்தம் வரும் மாதத்துடன் நிறைவடையவுள்ளது.

இவரது ஒப்பந்தம் கடந்த ஆண்டு நிறைவடைந்த போது மேலும் ஒருவருடத்திற்கு அவரது ஒப்பந்தம் நீடிக்கப்பட்டது.

எனினும் ஜோன்ரைட் தனது குடும்பத்துடன் தங்கியிருக்க விரும்புவதால் ஒப்பந்தம் முடிவடைந்ததும் நியூசிலாந்துக்கு பயண மாகவுள்ளார்.

இந்நிலையில் இந்திய அணியின் அடுத்த பயிற்சியாளராக அவுஸ்திரேலியாவின் முன்னாள் வீரர் கிரேக் செப்பல் நியமிக்கப்படலாம் எனத் தெரிவிக்கப்படுகிறது.




**-எவரெடி உதைபந்தாட்டப் போட்டி-**

## 17ம் திகதி கண்டி லீக் அணி யாழ். அணியுடன் மோதும்

அகில இலங்கை உதைபந்தாட்டச் சம்மேளனம் நடத்தும் எவரெடி உதைபந்தாட்டச் சுற்றுப்போட்டியில் 19வயது பிரிவு கண்டி லீக் அணி வரும் 17ம்திகதி யாழ். அணியுடன் மோதவுள்ளது.

யாழ். துரையப்பா விளையாட்டரங்கில் இப்போட்டி நடைபெறவுள்ளதால் இவ்விளையாட்டரங்கை தற்காலிகமாகவாவது சீரமைத்து வழங்க யாழ். மாநகரசபை ஆணையாளர் நடவடிக்கை எடுத்துள்ளார். பதுளை மாவட்ட லீக் வரும் 24ஆம் திகதி யாழ்ப்பாணம் வரவுள்ளது.

# யாழ். இல் உள்ள தொல்பொருட்களைப் பேண நடவடிக்கை எடுக்கவில்லை

## -யாழ். கல்விச்சமூகம் கவலை

யாழ். குடாநாட்டில் உள்ள தொல்பொருள்சான்றுகள் உரிய முறையில் பேணப்படுவதில்லை என குடாநாட்டு வாழ் புத்தி ஜீவிகளாலும் கல்விச்சமூகத்தினராலும் கவலை தெரிவிக்கப்படுகின்றது.

தமிழ் மக்களது பாரம்பரிய பூமியாக விளங்கும் யாழ்குடாநாட்டில் பல அரிய தொல்பொருள் சான்றுகள், தமிழ்மக்களின் பூர்வீகக்குடிகள் என்பவற்றை தெளிவுபடுத்தும் சான்றுகள் ஏராளமாகக் காணப்படுவதுடன் பல வரலாற்றுச் சின்னங்களும் காணப்படுகின்றன.

இவற்றைப் பேணிப் பாதுகாப்பதில் தொல்பொருள் திணைக்களத்தினரோ அல்லது அதுசம்பந்தப்பட்டவர்களோ உரிய நடவடிக்கைகளை மேற்கொள்ளாததால் இத்தொல்பொருள் சான்றுகள் சிதைவடைந்து அழிவடைந்து போகக்கூடிய துர்ப்பாக்கிய நிலை தோன்றியுள்ளது.

இதனால் இது குறித்து கவலை தெரிவித்து வருகின்ற யாழ்.குடாநாட்டுக்கல்விச்சமூகம் இவைபேணப்படுவதற்குரிய நடவடிக்கைகள் மேற்கொள்ளப்படல் வேண்டும் எனவும் கோரி வருகின்றது. (33)

# காது,மூக்கு,தொண்டை நோய்களிற்கான சிகிச்சையும், குழந்தைகள் மருத்துவமும்

வெளிநாட்டில் இருந்து வருகைதந்திருக்கும் காது, மூக்கு, தொண்டை சிகிச்சை நிபுணரினாலும் குழந்தைகள் மருத்துவ நிபுணர் காருண்யன் அவர்களினாலும் இது தொடர்பான நோய்களிற்கு ஆலோசனைகளும், சிகிச்சைகளும் புதுக்குடியிருப்பு டாக்டர் பொன்னம்பலம் ஞாபகார்த்த மருத்துவமனையில் இன்று ஞாயிற்க்கிழமை காலை 8.00 மணி தொடக்கம் பிற்பகல் 2.00 மணி வரை வழங்கப்படவுள் ளது. இதில் பயன்பெற விரும்புவோர் வெளி நோயாளர் சிகிச்சைப் பிரிவுடன் தொடர்பு கொள்ளுமாறு கேட்டுக் கொள்ளப்படுகின்றனர்.

# புங்குடுதீவில் ஈ.பி.டி.பி.யின் முகாமை மக்கள் நேற்று தீயிட்டுக் கொளுத்தினர்

புங்குடுதீவில் அமைக்கப்பட்டிருந்த ஈ.பி.டி.பி.யினரின் முகாம் ஒன்றை அப்பகுதி மக்கள் தீயிட்டுக் எரித்துள்ளனர்.

நேற்று இடம் பெற்ற சம்பவம் பற்றி தெரியவருவதாவது, மேற்படி பிரதேசத்தில் நீண்ட காலமாக முகாம் ஒன்றை. நிறுவித் தங்கியிருக்கும் ஈ.பி.டி.பி. தேசவிரோதிகள் அப்பகுதிகளுக்கு பல வகையான அச்சுறுத்தல்களை விடுக்கும் செயற்பாடுகளில் படையினரின் துணையுடன் ஈடுபட்டு வந்துள்ளனர்.

அதனால் ஆத்திரமடைந்த மக்கள் இம்முகாமை விட்டு அகன்று தமது இயல்பான வாழ்வுக்கு வழிவிடுமாறு கோரிவந்தபோதும் தமது முகாம்களை அகற்றி மக்களின் இயல்பு வாழ்விற்கு அவர்கள் வழி விடவில்லை.

இதனால் ஆத்திரமடைந்த மக்கள் நேற்று மாலை மேற்படி ஈ.பி.டி.பி.யினரின் முகாமிற்குள் புகுந்து அங்கு தங்கியிருந்த ஈ.பி.டி.பி உறுப்பினர்களை விரட்டியடித்ததுடன் அம்முகாமை தீயிட்டு எரித்தும் உள்ளனர். (33)

# புளியம்பொக்கணை ஆலய உத்தரப் பொங்கல் இன்று

கிளி.மாவட்ட கரைச்சி புளியம் பொக்கணை நாகதம்பிரான ஆலய வருடாந்த பங்குனி உத்தரப் பொங்கல் இன்று இரவு பகல் மிகவும் சிறப்பாக நடைபெறவுள்ளது. கடந்த 28ஆம் திகதி விளக்கு வைத்து தினமும் விசேட பூசைகளும் அன்னதானமும் வழங்கப்படுகின்றது. பண்டைய மரபுப்படி மீசாலை புத்தூர் சந்தி பண்டமரவாடியில் இருந்து மாட்டு வண்டில்களில் பண்டம் ஏ-9 வீதிவழியாக எடுத்துவரப்படுகின்றது. (14)

# சமூக அபிவிருத்தித்திட்டத்தின் கீழ் கிளி. மாவட்டத்தில் 5 கிராமங்கள் தெரிவு

## -"நிகொட்" செயலகத்தில் ஒப்பந்தமும் கைச்சாத்து

(அலுவலக செய்தியாளர்)

நிகொட் சமூக அபிவிருத்தித் திட்டத்தின் கீழ் கிளிநொச்சி மாவட்டத்தில் கரைச்சி, கண்டாவளை, பூநகரி, பச்சிலைப்பள்ளி பிரதேச செயலர் பிரிவின் கீழுள்ள விநாயகர்புரம், எள்ளுக்காடு, காஞ்சிபுரம், இரணைமாதாநகர், கோவில்வயல் ஆகிய ஐந்து கிராமங்கள் தெரிவு செய்யப்பட்டு சமூக அபிவிருத்தித் திட்டங்களை முன்னெடுப்பதற்கான ஏற்புடைய ஒழுங்குகள் செய்யப்பட்டுள்ளன.

இதன் முதற்கட்டமாக குறித்த ஐந்து கிராமங்களில் வேலைத் திட்டங்களை முன்னெடுப்பதற்கென கிளிநொச்சி மாவட்டதமிழர் புனர்வாழ்வுக்கழகம் பங்காளர் நிறுவனமாக தெரிவுசெய்யப்பட்டு இவ் வேலைகளை முன்னெடுப்பதற்கான கிராம புனர்வாழ்வுத் திட்டத்தை தயாரிப்பதற்காக முதற்கட்ட ஒப்பந்தம் கடந்த 30.03.2004ஆம் திகதியன்று மேற்கொள்ளப்பெற்றது.

அன்றையதினம் கிளிநொச்சி மாவட்ட அரச செயலகத்திலுள்ள நிகொட் செயலகத்தில் ஒப்பந்தம் கைச்சாத்திடும் நிகழ்வு நடைபெற்றது. இதில் நிகொட் நிறுவன கிளிநொச்சி மாவட்ட சமூக அபிவிருத்தி உத்தியோகஸ்தர் சிறீதரன், கிளிநொச்சி மாவட்ட தமிழர் புனர்வாழ்வுக்கழக மாவட்ட பணிப்பாளர் ஜெகாஸ், கிளிநொச்சி மாவட்ட தமிழர் புனர் வாழ்வுக்கழக நிகொட் செயற்திட்ட இணைப்பாளர் ரவிக்காந், நிகொட் செயற்திட்ட கிராமிய இணைப்பாளர் குகநாதன் ஆகியோர் கலந்துகொண்டனர்.

ஐந்து கிராமங்களில் முன்னெடுக்கப்படவுள்ள செயற்திட்டங்களைத் தயாரிப்பது தொடர்பான கிராம புனர்வாழ்வுத் திட்டத்தை தயாரிப்பதற்கான ஒப்பந்தத்தில் கிளிநொச்சி மாவட்ட அரச அதிபர் இராசநாயகம், கிளிநொச்சி மாவட்ட தமிழர் புனர் வாழ்வுக்கழக மாவட்ட பணிப்பாளர் ஜெகாஸ் ஆகியோர் கைச்சாத்திட்டனர்.

இச்செயற்திட்டத்தின் அடிப்படையில் 2003ஆம் ஆண்டு டிசம்பர் 31 ஆம் திகதியன்று கைச்சாத்திடப்பட்ட ஒப்பந்தத்தின் அடிப்படையில் கிளிநொச்சி மாவட்டத்தில் கரைச்சிப்பிரதேச செயலர் பிரிவின் பாரதிபுரம் கிராமத்தில் ஏழு இலட்சம் ரூபா பெறுமதியில் சமூக அபிவிருத்தி வேலைத் திட்டங்களை தமிழர் புனர்வாழ்வுக்கழகத்தால் முன்னெடுத்து வருகின்றமை குறிப்பிடத்தக்கது. (சோ)

### கிளி...

களை வழங்கவுள்ளனர்.

இந்த நிகழ்வில் அனைவரையும் கலந்துகொள்ளுமாறு கிளிநொச்சி மருத்துவ சங்கத்தினர் வேண்டியுள்ளனர்.

### வன்னித்...

றுள்ளது

தமிழ்க்கூட்டமைப்பு மொத்தமாக 90834 வாக்குகளையும் ஐக்கிய தேசிய முன்னணி 33540 வாக்குகளையும் பெற்றுள்ளன. இதனை விட ஐக்கிய மக்கள் முன்னணி 7340 , புளொட் 6318, ஈபிடிபி 1097 வாக்குகளையும் பெற்றுள்ளன.

### ஈ.பி.டி.பி...

காவற்றுறை சந்திப்பகுதியில் நேற்று மாலை ஆர்ப்பாட்டப் போராட்டம் ஒன்றை நடத்தினர்.

நிராயுதபாணிகளாக உலாவும் அரசியல் துறை போராளிகளை ஆயுத முனையில் அச்சுறுத்திய இச்சம்பவத்தைக் கண்டித்து அரசியல் துறையினர் பேர் நிறுத்த கண்காணிப்புக் குழுவிலும் முறைப்பாடு செய்துள்ளனர்.(33)

### முறைப்பாடு...

நிராகரித்துள்ளார்.

சுயேட்சைக்குழு ஒன்றின் தலைவரான வீ.ஆனந்தசங்கரி, ஈ.பி.டி.பி மற்றும் புளொட் ஆகியவற்றின் தலைவர்கள் முறைகேடுகள் நடந்ததாகவும் இதனால்தான் யாழ்ப்பாணம் தேர்தல் மாவட்ட வாக்கெடுப்பை இரத்துச் செய்து மீண்டும் வாக்க கெடுப்பை நடத்தவேண்டும் என்றும் தேர்தல் ஆணையாளரிடம் கோரிக்கைகளையும் விடுத்திருந்தனர்.

இக்கட்சியினர் செய்துள்ள முறைப்பாடுகளுக்கு ஆதாரம் இல்லை என்று கூறி தேர்தல் ஆணையாளர்தயானந்த திஸநாயக்க அவற்றை நிராகரித்துள்ளார். அத்துடன் யாழ்ப்பாண மாவட்ட தேர்தல் குறித்து "பப்ரல்"என்ற தேர்தல் கண்காணிப்பு அமைப்பு விடுத்த அறிக்கையையும் ஆணையாளர் நிராகரித்துள்ளார்.

### கூட்டமைப்பை...

நாமும் எமது தலைமைத்துவமும் தமிழ் மக்களுடன் ஒரு புதிய உறுதிப்பாட்டுடன் உழைத்து எமது இலட்சிய இலக்கை எட்டுவோமென்ற நம்பிக்கை பிறந்துள்ளது.

எமது தேசியத்தினையும் தாயகத்தின் மீதான பற்றுதலையும் எமக்குள்ள சுயநிர்ணய உரிமையையும் நாம்அனைத்துலகிற்கும் மீளவும் வலுவுடன் பறைசாற்றுவதற்கான சாதகமான சூழ்நிலை அமையப்பெற்றுள்ளது. (27,33)

### தேர்தல்...

விரிவான விசாரணை அறிக்கைகள் முழுமையாகக் கிடைக்கப்பெற்றதும் அது குறித்து முடிவு எடுக்கப்படும். அத்துடன் கட்சி செயலாளர்களுடன் கலந்துரையாடல் ஒன்றை நடத்தவுள்ளேன். இக்கலந்துரையாடலின் பின்னர் இன்று காலை 10.00 மணிமுதல் அறிவிக்கப்படாத மாவட்டங்களுக்கான முடிவுகள் அறிவிக்கப்படும் என்றும் தேர்தல் ஆணையாளர் தெரிவித்துள்ளார்.

## விருப்பு வாக்கு...

### யாழ். மாவட்டம்

| இலங்கை தமிழ் அரசுக் கட்சி | மொத்தம் | சதவீதம் |
|---|---|---|
| செல்வராசா கஜேந்திரன் | 112,077 | 19.67% |
| திருமதி பத்மினி சிதம்பரநாதன் | 68,239 | 11.98% |
| கஜேந்திரகுமார்காங்கேசர்பொன்னம்பலம் | 60,768 | 10.66% |
| கந்தையா பிறேமச்சந்திரன் | 45,783 | 8.03% |
| கிட்டினன் சிவநேசன் | 43,730 | 7.67% |
| நடராஜா இரவிராஜ் | 42,963 | 7.54% |
| கனகலிங்கம் சிவாஜிலிங்கம் | 42,191 | 7.40% |
| சோமசுந்தரம் சேனாதிராசாமாவை | 38,779 | 6.81% |
| ஈ.பி.டி.பி. (பெயர் அறியவரவில்லை) | 18,612 | |

### திருகோணமலை மாவட்டம்

| இலங்கை தமிழரசுக்கட்சி | மொத்தம் |
|---|---|
| இரா.சம்பந்தன் | 47735 |
| துரைரட்ண சிங்கம் | 34773 |
| சிறிலங்கா முஸ்லிம் காங்கிரஸ் | |
| நஜீப் அப்துல் மஜித் | 26948 |
| மக்கள் ஐக்கிய சுதந்திர முன்னணி | |
| ஜெயந்த விஜேயசேகரா | 19983 |

### மட்டக்களப்பு மாவட்டம்

| இலங்கை தமிழரசுக்கட்சி | மொத்தம் |
|---|---|
| தம்மன் பிள்ளை கனகசபை | 57843 |
| செல்வி தங்கேஸ்வரி கதிராமன் | 50545 |
| சேனாதிராசா ஜெயானந்த மூர்த்தி | 44457 |
| கிங்ஸ்லி இராசநாயகம் | 38633 |
| சிறிலங்கா முஸ்லிம் காங்கிரஸ் | |
| அமீர் அல் சிஹாப்டீன் | 21216 |

### வடக்கு,கிழக்கு...

றியுள்ளது. இதில் செல்வம் அடைக்கலநாதன் அதிகபட்சமாக 34000க்கு மேற்பட்ட விருப்பு வாக்குகளைப் பெற்றுள்ளார்.

கிழக்கில் ஐந்து ஆசனங்களுக்காக நடைபெற்ற திருமலை மாவட்டத் தேர்தல் தொகுதியில் தமிழ் தேசியக் கூட்டமைப்பு இரண்டு ஆசனங்களைக் கைப்பற்றியுள்ளது. இதில் அம்மாவட்டத்தின் முதன்மைவேட்பாளர் இரா.சம்பந்தன் மற்றும் துரைரெட்ணசிங்கம் ஆகியோர் வெற்றிபெற்றுள்ளனர். இம் மாவட்டத்தின் உத்தியோக பூர்வ முடிவுகள் இதுவரை வெளியாகாத நிலையில் இரா.சம்பந்தன் 41000க்கும் அதிகமான விருப்பு வாக்குகளைப் பெற்று வெற்றி பெற்றுள்ளதாக அறிவிக்கப்பட்டுள்ளது.

ஆறு ஆசனங்களுக்கான மட்டக்களப்பு மாவட்டத் தேர்தல் தொகுதியில் தமிழ் தேசியக் கூட்டமைப்பு நான்கு ஆசனங்களைக் கைப்பற்றியுள்ளது. இதில் தம்பன்பிள்ளை கனகசபை 57000க்கு மேற்பட்ட விருப்பு வாக்குகளை பெற்று வெற்றிபெற்றுள்ளார்.

இதன்மூலம் தமிழ்த் தேசியக் கூட்டமைப்பு கடந்த பொதுத்தேர்தலைப் பார்க்கிலும் இம்முறை நடைபெற்ற தேர்தலில் ஆறு ஆசனங்களை அதிகபட்சமாகப் பெற்றுள்ளது.

இதேவேளை இவ் வெற்றியினை அடுத்து தமிழ் மக்கள் இனிப்புக்கள் வழங்கி மகிழ்ந்தனர்.

# சாவு அறிவித்தல்

## ஆறுமுகம் நடேசதுரை

சாவகச்சேரி நுணாவிலைப் பிறப்பிடமாகவும் பாண்டியன்குளம் பனங்காமம் பகுதியை வசிப்பிடமாகவும் கொண்ட ஆறுமுகம் நடேசதுரை 03.04.2004 அன்று சாவடைந்துள்ளார்.

அன்னார் காலஞ்சென்ற சிதம்பரத்தின் அன்புக் கணவரும், நவீனன் (பனங்காமம்), நவநீதன் (தனியார்கல்விப்பிரிவு இணைப்பாளரும் நிர்வாக அலுவலர், நிதிப்பிரிவு, அரசியல்துறை), சிவறஜனி (திருகோணமலை), பரணீதரன் (நிதிப்பிரிவு, அரசியல் துறை), நகுலேந்திரன் (தமிழர் புனர்வாழ்வுக்கழகம்), சிவாஜினி (வவுனியா), நந்தபாலன் (தமிழர் புனர்வாழ்வுக் கழகம்) ஆகியோரின் அன்புத் தந்தையும், தவராணி(பனங்காமம்), கவிதா (முகாமையாளர், கிராமிய அபிவிருத்திவங்கி-கிளிநொச்சி), பாஸ்கரன் ஆகியோரின் அன்பு மாமனாரும் ஆவார்.

அன்னாரின் இறுதிக்கிரியைகள் தொடர்பான விபரம் பின்னர் அறிவிக்கப்படும்.

தகவல்:

ந. நவநீதன் (மகன்)

114, 30 வீட்டுத்திட்டம்,
உதயநகர் மேற்கு,
கிளிநொச்சி (சி-9347)

இப்பத்திரிகை கிளிநொச்சி ஈழநாதம் பணிமனையில் 2004 ஆம் ஆண்டு ஏப்ரல் மாதம் 04 ஆம் திகதி அச்சிட்டு வெளியிடப்பட்டுள்ளது.